**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**
**O.S. No.141/2022**

Deposition of the PW.2 witness for

| | | |
|---|---|---|
| Name | : | சனில்குமார் |
| Father's Name | : | ராமகிருஷ்ணன் |
| District | : | |
| Taluk | : | |
| Village | : | |
| Calling | : | |
| Age | : | |
| Date | : | 06.03.2026 |

Solemnly affirmed by Tmt.K.V.Ashmitha, Bench Clerk Grade-III, Principal District Munsif Court, Padmanabhapuram in accordance with the Provision of Act XLIV of 1893.

<u>முதல் விசாரணை-</u>

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். வா.சா.ஆ.8 ஆவணமான தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் உயில் ஆவணம் தங்கம் என்பவர் சொல்லி வினோ என்பவருக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் தங்கம் என்பவருடைய கையெழுத்து ஆகும். மேற்சொன்ன தங்கம் உயில் ஆவணத்தில் கையொப்பம் செய்த போது அதை நான் நேரடியாக பார்த்தேன். நானும் மேற்சொன்ன உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். என்னிடத்தில் காண்பிக்கப்படும் உயில் ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

நான் கையொப்பம் செய்த போது மற்றொரு சாட்சியும் என் முன்னிலையில் தான் கையொப்பம் செய்தார். அவர் கையொப்பம் செய்த போது நான் உடன் இருந்து பார்த்தேன்.

பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை -</u>**

1. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். எனக்கு எந்த ஊர் என்றால் காஞ்சான்புரம் ஆகும்.

மேற்சொன்ன ஊரில் எத்தனை ஆண்டுகளாக வசித்து வருகிறேன் என்றால் 40 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். காஞ்சான்புரத்திற்கும், பாலபள்ளத்திற்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 18 முதல் 20 கி.மீ தொலைவு இருக்கும்.

2. உயில் ஆவணமான வா.சா.ஆ.8 ல் சொல்லப்பட்டுள்ள வினோ என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. தங்கம் என்பவரை தெரியுமா என்றால்தெரியும். தங்கம் என்னுடைய உறவினரா என்றால் இல்லை. மேற்சொன்ன தங்கம் என்பவரை எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் வழக்கறிஞர் அசோக் பத்மராஜ் அலுவலகத்திற்கு வந்த போது தெரியும். உயில் ஆவணம் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் வழக்கறிஞர் அசோக் பத்மராஜ் அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது. எந்த தேதி, மாதம், வருடத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் 15.03.2018 ஆகும்.

3. உயில் ஆவணம் கையால் எழுதப்பட்டதா, கணினி மூலம் டைப் செய்யப்பட்டதா அல்லது தட்டச்சு இயந்திரம் மூலம் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் கணினி மூலம் டைப் செய்யப்பட்ட ஆவணமாகும். வழக்கறிஞர் அசோக் பத்மராஜ் அவர்களுக்கும் எனக்கும் என்ன பழக்கம் என்றால் நான் அடிக்கடி மேற்சொன்ன வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்று வருவேன். மேற்சொன்ன வழக்கறிஞர் வழக்குகள் மூலம் எனக்கு பழக்கமா என்றால் இல்லை, தெரிந்த நபர்கள் மூலம் பழக்கம்.

4. நான் மேற்சொன்ன உயில் ஆவணத்தில் யார் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் தங்கம் என்பவர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் கையொப்பம் செய்தேன். உயில் ஆவணம் வெள்ளை பேப்பரில் எழுதப்பட்டதா, முத்திரைத்தாளில் எழுதப்பட்டதா என்றால் முத்திரைத் தாளில் எழுதப்பட்டது. மேற்சொன்ன உயில் ஆவணத்தை தயாரித்த போது நான் உடனிருந்தேனா என்றால் உடனிருந்தேன், அவர்கள் உயில் ஆவணத்தை தயார் செய்த போது நான் பார்த்தேன்.

5. மேற்சொன்ன உயில் ஆவணத்தை தயார் செய்வதற்கு முன்பு தான் முத்திரை தாள் வாங்கி வரப்பட்டது என்றால் அதை நான் பார்க்கவில்லை. உயில் ஆவணம் எத்தனை தொகை உள்ள முத்திரை தாள் என்றால் நான் முத்திரை தாளில் கையொப்பம் செய்யவில்லை, நான் வெள்ளை தாளில் தான் கையொப்பம் செய்தேன். என்னிடத்தில் வெள்ளை தாளில் தான் கையொப்பம் செய்தேனா என்றால் உயில் நான்கு, ஐந்து பக்கங்கள் இருந்தது, நான் கடைசி தாளில் கையொப்பம் செய்தேன்.

6. இதர பக்கங்களில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் நான் கையெழுத்து போட்டேனா என்றால் ஓரளவிற்கு படித்து பார்த்து தங்கம் கேட்டுக் கொண்டதால் கையொப்பம் செய்தேன். தங்கம் என்பவரின் கணவர் பெயர் என்ன என்றால் தர்மராஜ் என்று நினைக்கிறேன். மற்றொரு சாட்சியான ராஜகுமாரதாஸ் கையொப்பம் செய்த பிறகு தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். ராஜகுமாரதாசை நான் பார்த்துள்ளேனா என்றால் அன்றைய தினம் மட்டும் தான் பார்த்தேன், அதன் பிறகு பார்க்கவில்லை.

7. தங்கம் எத்தனை கையெழுத்து போட்டார் என்று எனக்கு தெரியுமா என்றால் நான்கு பக்கங்களில் கையொப்பம் செய்ததாக நினைவில் உள்ளது. தங்கம் தற்போது உயிரோடு இருக்கிறாரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த உயில் ஆவணத்தில் எத்தனை பட்டிகை சொத்துக்கள் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தங்கம் எங்கு வைத்து கையொப்பம் செய்தார் என்றால் மேற்சொன்ன வழக்கறிஞர் அசோக் பத்மராஜ் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்தார்.

8. உயில் ஆவணம் தயார் செய்வதற்கு தங்கம் என்ன ஆவணங்களை வழக்கறிஞரிடம் தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. உயில் ஆவணம் தயாரிப்பதற்கு அசல் ஆவணமா, நகல் ஆவணமா, கையால் எழுதப்பட்ட ஆவணமா கொடுக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. உயில் ஆவணம் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் மேற்சொன்ன வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது, நான் கண்ணாடியால் செய்யப்பட்ட கதவிற்கு வெளியே இருந்தேன். என்னுடன் யாரெல்லாம் இருந்தார்கள்

என்றால் ஐந்து, ஆறு நபர்கள் இருந்தார்கள். அவர்கள் யார் யார் என்று எனக்கு தெரியாது.

9. மேற்சொன்ன வழக்கறிஞர் அசோக் பத்மராஜ் எங்கு வழக்கறிஞராக உள்ளார் என்றால் நாகர்கோவிலில் வழக்கறிஞராக உள்ளார். மேற்சொன்ன உயில் ஆவணம் தயார் செய்து கையொப்பம் செய்தது அனைத்தும் நாகர்கோவிலில் உள்ள வழக்கறிஞர் அசோக் பத்மராஜின் அலுவலகத்தில் வைத்து தான் நடைபெற்றது என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் என்னுடைய பெயர், என் தகப்பனார் பெயர் மற்றும் முகவரி நான் கையால் எழுதி அதன்பிறகு கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை, நான் கையொப்பம் மட்டும் தான் செய்தேன்.

10. 1வது சாட்சியும் உயில் ஆவணத்தில் அவருடைய பெயர், அவருடைய தகப்பனார் பெயர் மற்றும் முகவரி ஆகியவற்றை கையால் எழுதி தான் கையொப்பம் செய்தாரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது, அவர் கையொப்பம் செய்தார். என்னுடைய பெயர், தகப்பனார் பெயர் மற்றும் முகவரி ஆகியவற்றை உயில் ஆவணத்தில் யார் எழுதினார்கள் என்றால் அங்கு இருந்த ஒரு நபர் தான் எழுதினார். உயில் ஆவணம் எழுதிய போது என்னுடைய ஆதார் அடையாள அட்டையை கொடுத்தேனா என்றால் நினைவில் இல்லை.

11. உண்மையிலேயே மேற்சொன்ன உயில் ஆவணத்தை தங்கம் தயார் செய்திருந்தால் கையொப்பம் செய்து, கைரேகையும் பதிவு செய்திருப்பார் என்றால் சரியல்ல, கையொப்பம் மட்டும் தான் செய்தார். நான் மேற்சொன்ன வினோவின் உறவுக்காரர் என்பதால் வழக்கிற்காக போலியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. இந்த விவரங்கள் அனைத்து தங்கம் சொல்லிக் கொடுக்கவில்லை என்றாலும், தங்கம் உயில் ஆவணத்தை ஏற்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து தங்கத்தின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.